விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25　மாசி 30　ஜ. அவ். 28　இதழ் 32

யாழ்ப்பாணம்　திங்கட்கிழமை　14—3—83

## நீர் விநியோகம், மின்சார சீர்கேடு: நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி தலைதூக்கும் மின்சார சீர்கேடுகளுக்கு முற்றுப் புள்ளிவைக்கும்பொருட்டுவிரைவில் ஐந்து புதிய உப மின்நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப் படவுள்ளன.

இதுசம்பந்தமானதீர்மானம் தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்தின் மகாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம், தேசிய வீடமைப்பு அதிகாரசபைத் தலைவர் திரு. டன்ஸ்டன் ஜயவர்த்தன, நீர் விநியோக வடிகால் அமைப்பு சபைத் தலைவர் திரு. என். டி. பீரிஸ், நீர்விநியோகசபை உயர் அதிகாரிகள் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், யாழ். மாநகர ஆணையாளர் திரு.சி. வி. கே. சிவஞானம் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில்; யாழ் மாநகர நீர்ப்பிரச்னை, காணி சுவீகரிப்பு பற்றியும் விரிவாக ஆராயப்பட்டு முடிவுசெய்யப் பட்டது.

திருநெல்வேலியிலுள்ள நீர் வழங்கல் திட்டத்தில், ஏற்கனவே உள்ள பழைய 'பம்ப்' அகற்றப்பட்டு புதிய 'பம்ப்' அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெறுகிறதென்றும் இந்த வேலைகள் இம்மாதமுடிவில்பூர்த்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுவதால் குடி நீர் விநியோகத் திட்டத்தை நல்ல முறையில் நசரிச்செயல்படுத்த முடியும் என்றும்,மேலதிகமாக இரண்டு கிணறுகளை; செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

நகரின் மின்விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை ஏற்கனவேஉள்ள உபமின்நிலையங்களில் மின்வலுவை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வதென்றும், மேலும் புதிதாக ஐந்துஉப மின்நிலையங்கள் அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்வதென்றும் தெரிவிக்கப்பட்டது.

### காணி சுவீகரிப்பு

யாழ் மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் சில பகுதிகளில் காணிகளைச் சுவீகரித்து வீடு இல்லாதவர்களுக்கு வழங்கநடவடிக்கை மேற்கொள்வதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முலவை, நேவரிக்குளம், திட்டி ஆகியபகுதிகளில் காணிகளைச் சுவீகரித்து அந்தப்பகுதிகளில் வாழும் [காணி இல்லாத] மக்களுக்கு வழங்குவதென்றும், இது சம்பந்தமான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று வகுப்புகளுக்குச் செல்வர்

(யாழ்ப்பாணம்)

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்த யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இன்று காலை கூடி ஆலோசனை செய்த பின்னர் வகுப்புகளுக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் வீடுகளில் தங்கியிருந்த திருகோணமலையைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் ராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதை தொடர்ந்துயாழ் பல்கலைக்கழக மாணவர்அவை கூடி இது சம்பந்தமாக ஆலோசனை நடாத்தி மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அவை நிறைவேறும்வரை வகுப்புகளுக்குச் செல்வதில்லையென்று முடிவு செய்திருந்தது.

கோரிக்கைகளில் ஒன்றான கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிப்பது சம்பந்தமாக மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா, பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. எஸ். எஸ் தர்மபாலன் ஆகியோர்முயற்சிமேற்கொண்டதைத் தொடர்ந்து மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மற்றைய இரு கோரிக்கைகளும் குறித்து, இன்று கூடி ஆலோசனை நடாத்திஇக்கோரிக்கைகளை பல்கலைக்கழக உபவேந்தர், பதிவாளர் ஆகியோருடன் ஆலோசித்து முடிவு செய்த பின்னர்வகுப்புகளுக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலைக்கழக வளவில் தஞ்சம் புகுந்திருந்த மாணவ மாணவிகளுக்கு பல்கலைக்கழக வளவில் தங்க விடுதிவசதி செய்துகொடுக்கவேண்டுமென்பதும், இராணுவத்தினரால் கைதுசெய்யநேரிடும் மாணவர்கள் உபவேந்தரின் அனுமதி பெற்றபின்னரே கைது செய்யப்பட வேண்டும் என்பதும் மற்றைய இருகோரிக்கைகளாகும்.

வீடுகளிலிருந்து வெளியேறிய மாணவர்களில் பெரும்பாலானோர் திரும்பவும் தங்களது வீடுகளுக்கு திரும்பி விட்டனர். 5 மாணவர்களுக்கு பல்கலைக்கழக வளவுக்குள் இருக்க இடவசதி செய்து கொடுக்க நிர்வாகம் முயற்சி எடுத்துள்ளது.

நிலைமை இப்படி இருந்த போதிலும், மாணவர் அவை உபவேந்தருடன் இன்று நடத்தும் பேச்சு வார்த்தை சுமுகமான ஒரு முடிவுக்கு வரும் என்றும், மாணவர்கள் இன்று வகுப்புகளுக்குச் செல்வார்கள் என்றும் மாணவர் அவை வட்டாரங்கள் தெரிவித்தனர். [மா]

## எண்ணெ விலை குறையுமா ?

[கொழும்பு]

எண்ணெய்விலை விரைவில் குறையுமா?

இலங்கை அரசாங்கம் பெற்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை அண்மையில் அதிகரித்திருந்தபோதிலும்இலங்கைக்கு எண்ணெய்யை ஏற்றுமதி செய்யும் நாடுகள் தற்போது எண்ணெய்விலையை குறைத்துள்ளதால் இங்கும்விலைகுறையலாமெனத் தெரியவருகிறது.

'ஒபெக்' நாடுகள் சில தற்போது எண்ணெய் விலையைக் குறைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

## இன்று பொதுநல அமைப்பு தினம்

(கொழும்பு)

பொதுநலவமைப்பு தினம் இன்று நாடுமுழுவதிலுமுள்ள கல்லூரிகளில் கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் கல்லூரிகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## ஜனதிபதி இன்று நாடு திரும்புகிறர்

[கொழும்பு]

புதுடில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 7-வது உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று நாடு திரும்புகிறர்.

ஜனதிபதி ஜெயவர்த்தன புதுடில்லியில் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி, ஜனதிபதி ஸெயில் சிங், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் ஜனப் யசீர் அரபாத் ஆகியோரையும் சந்தித்து சர்வதேச விவகாரங்கள் குறித்து கலந்துரையாடினர்.

## வாரியாருக்கு இன்றுகொழும்பில்வரவேற்பு

(கொழும்பு)

அருள்மொழி அரசுதிருமுருக கிருபானந்த வாரியாருக்கு வரவேற்பும, 'ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா எழுதிய 'நிழலின் பின்னே மனிதன்' நூல்வெளியீட்டுவிழாவும் இன்று பம்பலப்பிட்டி புதியகதிரேசன்மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

இதற்கான ஒழுங்குகளை வல்வெட்டித்துறை இந்து சமய கலாச்சார நலன்புரி மன்ற கொழும்புக்கிளை ஏற்பாடுசெய்துள்ளது.

சமிகத்தலைவர் திரு. அரு. அம்பலவாணர் விழாவுக்குத் தலைமை வகிப்பார், செயலாளர் திரு. பொ. வல்லிபுரம் வரவேற்புரை கூறுவார். 'வீரகேசரி' பிரதம ஆசிரியர் திரு. சு. சிவப்பிரகாசம், ஆத்மஜோதி' ஆசிரியர் திரு, நா முத்தையா, தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் ஆகியோர்வாழ்த்துரை வழங்குவர்.

வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர் திரு. ச. ஞானமூர்த்தி வாரியார் சுவாமிகளுக்கு பொன்னாடை போர்த்து பாராட்டுவார்.

'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா எழுதிய 'நிழலின் பின்னே மனிதன்' என்றநூலை அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் வெளியிட்டு உரையாற்றுவார். முதற்பிரதியை ஜிந்துப்

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட அசம்பாவித சம்பவங்கள்: யாழ். செயலகத்தில் ஆலோசனை; பாராளுமன்றத்தில் கண்டனம் தெரிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் குறித்து நேற்று யாழ். செயலகத்தில் யாழ் மாவட்ட சபைத்தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு எம். சிவசிதம்பரம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம், பி. திரு. த. இராசலிங்கம், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். பல்கலைக்கழகப்பதிவாளர் திரு. எஸ். தர்மபாலன் ஆகியோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்

யாழ். பல்கலைக்கழக மாணவர் கைது செய்யப்படுவதும் இராணுவத்தினரின் கெடுபிடி பொதுமக்கள் தாக்கப்பட்டமை போன்ற பிரச்னைகள் குறித்துஇக்கூட்டத்தில் நீண்ட நேரம் ஆலோசிக்கப்பட்டது.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் பல்கலைக்கழக மாணவர் அவை விடுத்த கோரிக்கைகளில் சில தீர்க்கப்பட்டுள்ள தென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஆயுதப்படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும், மேலும் இச்சம்பவங்கள் நீடிக்காத வகையிலும் இராணுவ அதிகாரிகள் எம். பி.க்கள் விடுத்தமாதம் 2ம் திகதி கூடி ஆலோசிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆயுதப்படையினரின் தாக்குதல் சம்பவங்கள் குறித்து பாராளுமன்றத்தில் கண்டனந்தெரிவிக்கப்போவதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் தெரிவித்தார். (மா)

## மூன்றுவது மாணவனும் விடுதலை

[யாழ்ப்பாணம்]

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக் கழக மாணவர்களில் மூன்றுவது மாணவரும் நேற்று முன் தினமிரவு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கல்வியங்காட்டிலுள்ள வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்ட மாணவன் ஜி. சந்திரகுமார் என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவர்.

நேற்று முன்தினம் மாலை மற்றைய இருமாணவர்களும் விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே,

விடுதலை செய்யப்பட்ட யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் அ. செல்வராசாவும் நேற்றுக்காலை மீண்டும் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் நண்பகல் விடுதலை செய்யப்பட்டார். [மா]

# சரி விளம்பரம்

## விற்பனைக்கு

HONDA 125 புனரமைக்கப்பட்டது. நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு எஸ். ராகவன், திருநெல்வேலி சந்தி. (Y. M. H. A. அருகாமையில்). 6508

2 சிலிண்டர் டீசல் பெற்றர் இயந்திரமும் 5 K. V. A. டைனமோவும் உடன் விற்பனைக்குண்டு. சிவபாலமூர்த்தி 6/2, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். 6492

சொந்தப் பாவிப்பிலுள்ள நல்ல நிலைமையில் கொண்டா C. D. 185 விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். ஸ்ரான்லி பேணிசிங் பலஸ். ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 6529

சண்முகநாதன் புத்தகசாலை அருகில் சுமார் 3 பரப்பு, 4 கடையும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச. மு. திருஞானம்செட்டியார், 293, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 6531

வண்ணார்பண்ணை வடமேற்கு பகுதியில் லோட்டஸ் வீதியில் 2 அறைகள் 1 வராந்தாவுடன் குசினியும் அமைந்த சாலியான வீடும், 2½ பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: S. சதாசிவம், புதிய வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 6532

## தேவை

தட்டெழுத்தாளர் பகுதி நேரவேலைக்கு தேவை. சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். S. சுந்தரலிங்கம், 10, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 6520

## பயிற்சி

கொம்பியூட்டர் புரோகிரமிங், ரேடியோ - டெலிவிசன், எலக்றிக்கல் வயறிங் மோட்டர் மெக்கானிசம் வெல்டிங் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் வகுப்புக்கள் ஆரம்பம் 21-03-83 விபரம் நேரில் The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6524

## வருடாந்த பரிசளிப்புவிழா

(பண்டத்தரிப்பு)

இளவாலை கொன்வென்ற் மகளிர் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்புவிழா இன்று திங்கட்கிழமை மாலை வித்தியாலய அதிபர் சகோ. சகோதரி மிக்ரரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் ஆயர் அதி-வந். கலாநிதி பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார்கள். பரிசில்களை திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் வழங்குவார். (க)

**விளம்பரம் செய்க வியாபாரம் பெருக**

## பதவி வெற்றிடம்

- ✶ விற்பனைப் பிரதிநிதி (பிடவைத் தொழில்)
- ✶ வாகன சாரதி
- ✶ விற்பனை உதவியாளர்
- ✶ பாதுகாவலர் பதவி

மேல் கொடுக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு அனுபவம், திடகாத்திரம், கல்வியறிவு உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

25 வயதுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 21-03-83

சேவை நிபந்தனை மற்றும் சம்பள விபரம் நேரில்.

**த சென்றல் பினான்ஸ் கம்பெனி**
லிமிட்.
250, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 34360

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
சாவகச்சேரி.

கல்லூரியிலிருந்து விலகியோருக்கான

## தொழில் நுட்பப் பயிற்சி நெறிகள்

ஆரம்பம்:- 01-04-83

1. மோட்டார் பொறியியல்
2. வானொலி இலத்திரனியல்

பயில விரும்பும் மாணவர்கள் 23-3-83 க்கு முன் அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.


மேற்படி நெறிகளுக்கு விண்ணப்பிப்போருக்கு 25-3-83 காலை 9-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் போது பாடசாலை விடுகைப் பத்திரம், கல்விச் சான்றிதழ், பிறப்புச் சாட்சிப் பத்திரம் முதலியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அதிபர்

9-3-83 6512

## முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம்: 6-5-1912 மறைவு: 23-2-82



**தம்பிப்பிள்ளை கனகசபை**

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி இவ்வுலக வாழ்வை நீத்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியடைகின்றது. காலங்கள் கடந்து சென்றாலும் உங்கள் நிழலிலேதான் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்தநேரத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
குடும்பத்தினர்

க. சாந்தசோதி,
சோதி வீதி, தையிட்டி,
காங்கேசன்துறை. 6279

வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு

## 26% தொடக்கம் 30% வரை

வட்டி கொடுக்கப்படும்.
குறைந்த தொகை ரூபா 1000/-
விபரங்களுக்கு:

**யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் லிமிற்.**
3, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன்: 23698

"யாழ் மக்களுக்கு அரியதோர் சேவையை "குறேஸ் ட்ரவல்" ஸ்தாபனத்தார் அளிக்கின்றார்கள்"

பெல்ஜியம் விசாவுடன் பிரான்ஸ், இத்தாலி சுவிற்சலாந்து ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளுடன், உலகின் சகல நாடுகளுக்கும் விமான, கப்பல் போக்குவரத்து ஒழுங்குகள் பிரயாணிகள் காசோலை, விசா போன்ற வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க:
"CROSS TRAVEL SERVICE"

## "குறேஸ் ட்ரவல் சேவிஸ்"

இல. 5, 2-வது தொடர் மாடி,
நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22040, 22065 [6480]

## எமது மற்றுமொரு சேவையில்...

யாழ். குடாநாட்டின் எப்பகுதியிலும்

- (i) வீடுகள்
- (ii) வீடு கட்டக்கூடிய காணிகள்
- (iii) கட்டடங்கள்
- (iv) தோட்டங்கள்

தேவையாயின் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

பினான்ஸ் வசதியுமுண்டு.

விபரங்களுக்கு:

**த பினான்ஸ் கொம்பனி லிமிற்றட்**
(REAL ESTATE DIVISION)
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

TFC

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 14216

கந்தையா ஞானேந்திரன்,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி. வழக்காளி

எதிராக

1. விஜயசி சிவலையும் 2. பெண் குஞ்சியும்
3. இராயப்பு செபமாலையும் 4. பெண் பொன்னம்மாவும் எல்லோரும் மயிலிட்டி வடக்கு,
மயிலிட்டி. காங்கேசன்துறை. எதிராளி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டில் MB 14216ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1983ஆம் ஆண்டு பங்குனி மீ 24 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 1-45 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 5329-30 பின் 3-11-73 தொடக்கம் 18-10-74 வரைக்கும் ரூபா 4000/-க்கு 12 % வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 640 சதம் 75 இம் முழுத்தொகையிலும் ரூபா 3500/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று மூலவை இறை 'இளமொட்டை' நிலப்பரப்பு 12 குளி 3 . 6 இதில் தெற்குப் புறமாக அறுதிவிற்ற நிலப்பரப்பு 10 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 2 குளி 3 . 6 பனைகளும் வடலிகளும் இதற்கு எல்லை கிழக்கு புதிதாக வைக்கப்பட்ட ஆறுமுழ கைஒழுங்கையும் கையொழுங்கை முகப்பும் வடக்கு வயிரவன் கந்தையாவுக்கும் பெண் இராசமணிக்கும் உரிய ஆதனம். மேற்கு வயித்தி கந்தப்பிள்ளைக்கும் பெண் பதாத்தைக்குரிய ஆதனம். தெற்கு கதிரன் கந்தனுக்கும் பெண் இலட்சுமிக்குமுரிய ஆதனம். இதடங்கலும் இன்னும் குறித்த கையொழுங்கையாலும் இன்னும் வடக்கே கணபதிப்பிள்ளை செல்வரத்தினமும் பெண் சரஸ்வதியினதும் காணியின் மேற்கெல்லை அருகால் வைக்கப்பட்ட ஆறுமுழ அகல கைஒழுங்கையாலும் போக்குவரவு செய்யும் உரித்தும்.

2. மேற்படி மயிலிட்டிக் கோவிற்பற்று மயிலிட்டி இறை "கொட்டவலை" நிலப்பரப்பு 20 இதற்கெல்லை கிழக்கு சின்னப்பு கதிரேசுவுக்கும் அல்லிபுரம் விஸ்வலிங்கத்துக்குமுரிய ஆதனம். வடக்கு வைரவன் கட்டையனின் ஆதனமும் மயிலக்கட்டைப் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனமும் மேற்கு மாலாணர் தம்பையாவின் உரிமைக்காரரின் ஆதனம் தெற்கு சிதம்பரப்பிள்ளை சின்னத்துரையினுதனமும் மயிலக்கட்டை பிள்ளையார் கோவிலுக்குமுரிய ஆதனம், இதடங்கலிற்சேரி பலசய் (¼) நாலிலொரு பங்கும் அதற்குரியவைகளும்.

சி. சோ. நரசிங்கம் L. I. V., J. P.,
நீதிமன்ற விற்பனையாளரும் மதிப்பாளரும்.

தெல்லிப்பழை,
5-1-83. 6516

## அணிசேரா உச்சிமாநாடு

# இந்தியர்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றனர்!

- ஜனாதிபதி ஸெயில்சிங்

## பாக்., பங்களா அதிபர்கள் மாநாடு குறித்து பூரண திருப்தி!

புதுடில்லி, மார்ச் 13

"7வது அணிசேரா உச்சிமகாநாடு மிகக்குறுகியகால அவகாசத்தில் துல்லியமாக நடந்துமுடிந்தது குறித்து பாரத மக்கள் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றனர்'' என்று இந்திய ஜனாதிபதி ஜியானி ஸெயில்சிங் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்திக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் ஜனாதிபதி ஸெயில்சிங் மேலும் அணிசேரா உச்சிமாநாடு புதுடில்லியில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது குறித்து பாரத மக்கள் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றனரென்றும், சர்வதேசரீதியில் இந்தியாவின் நிலை ஸ்திரமடையவும் உலக நாடுகளுடனான நட்புறவை மேலும் வளர்த்துக்கொள்ளவும் இம் மாநாடு அரிய சந்தர்ப்பங்களை வழங்கியது என்று தெரிவித்துள்ளார்.

புதுடில்லி அணிசேரா உச்சிமாநாட்டில் 99 நாடுகளின் பிரதிநிதிகளும் இந் நாடுகள் இலவற்றின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

நேற்றைய தினம் 30 நாடுகளின் தலைவர்கள் தாயகம் திரும்பினார்கள். பாகிஸ்தான் அதிபர், கியூபா அதிபர், நேபாள மன்னர், பி. எல். ஓ. தலைவர், இலங்கை அதிபர், பூட்டான் மன்னர், வங்காள தேச ஜனாதிபதி ஆகியோர் இத் தலைவர்களுள் அடங்குகின்றனர்.

இத் தலைவர்களை மத்திய அமைச்சர்கள் விமானநிலையத்தில் வழியனுப்பி வைத்தனர். இவ் வழியனுப்பு நிகழ்ச்சிகளை முன்னிட்டு புதுடில்லி விமான நிலையத்தில் வழமையான விமானப் போக்குவரத்துக்கள் பல இடைநிறுத்தப்பட்டிருந்தன.

கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ரோவை பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி விமான நிலையம் சென்று வழியனுப்பி வைத்தார். திரு. காஸ்ரோ அணிசேரா இயக்கத்தின் முன்னாள் தலைவர் என்பது தெரிந்ததே.

இதேவேளை தாயகம் சென்றடைந்த தலைவர்கள் பலர் புதுடில்லி மகாநாடு குறித்து பெரும் திருப்தி தெரிவித்துள்ளனர். பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ஹக் தாயகம் திரும்பியதும் விமான நிலையத்தில் வைத்து நிருபர்களுடன் பேசியபோது புதுடில்லி மகாநாடு பூரணவெற்றியளித்துள்ளதென்றும், ஈரான்—ஈராக் போர் முடிவுக்குக் கொண்டுவருவது குறித்தும், ஆப்கான் பிரச்சினையை தீர்ப்பது குறித்தும் இயக்க நாடுகளுக்கிடையே ஒற்றுமை காணப்பட்டதென்றும்.

அவர் மேலும், புதுடில்லி மாநாடு இந்திய—பாக் உறவை மேலும் வலுப்படுத்துவதாக இருந்ததென்றும் கூறினார்.

பங்களாதேஷ் ஜனாதிபதி லெப்டினண்ட் ஜெனரல் மொஹமட் எர்ஷாத் டாக்கா விமானநிலயத்தில் வைத்து வழங்கிய பேட்டி ஒன்றில் மகாநாட்டில் அரசியல் பொருளாதார விவாதங்கள் மிகவும் திறமையாகவும், உறுதியாகவும் இருந்தன என்றார். (கி)

## தண்டியாத்திரையில் ஆஸ்திரேலிய பேராசிரியர்!

புதுடில்லி, மார்ச், 13

மகாத்மா காந்தியின் தண்டியாத்திரை தினம் நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. வழமைபோலவே இந்த ஆண்டும் காந்தியடிகளின் சப்ரமதி ஆச்சிரமத்திலிருந்து தண்டியாத்திரை நடத்தப்பட்டது.

ஆஸ்திரேலியப் பேராசிரியரான தாமஸ் என்பவர் இம்முறை இந்த யாத்திரையில் கலந்துகொண்டார். இவர் மகாத்மா காந்தியின் தீவிர அபிமானிகளில் ஒருவர். அவர் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தண்டி யாத்திரை சுமார் 58 வருடங்களுக்கு முன்னர் காந்தியடிகளாலும் அவரது தொண்டர்களாலும் மேற்கொள்ளப்பட்டதொன்று. உப்புச் சத்தியாக்கிரகத்தை முன்னிட்டு தமது சப்ரமதி ஆச்சிரமத்திலிருந்து இந்த யாத்திரையை அவர் நடத்தினார். [கி]

## மேற்கிந்திய- இந்திய டெஸ்ட்

போர்ட்ஒப் ஸ்பெயின், மார்ச், 13

மேற்கிந்திய – இந்திய அணிகளுக்கிடையிலான 2-வது டெஸ்ட்டில் இந்திய அணி முதல் இனிங்ஸ் 175 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. ஆட்ட ஆரம்பத்தில் இந்தியா 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 44 என்றிருந்தது.

மேற்கிந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 3விக்கெட்டுகளை இழந்து 104 ஓட்டங்களுடன் இருந்துவருகிறது. காப்டன் கிளைவ்லாயிட் 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருக்கிறார். இவருடன் கோமிஸ் 38 ஓட்டங்களுடன் சோடி சேர்ந்திருக்கிறார்.

இந்திய பந்துவீச்சு வீரர்களான சந்து, கப்பில்தேவ் ஆகியோர் முறையே 2, 1 விக்கெட்டுகளை எடுத்தனர். (கி)

## ஜப்பான் - ஆப்கான் வர்த்தக வளர்ச்சி

டோக்கியோ, மார்ச். 13

ஜப்பானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தகம் நல்ல வளர்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1979—1980ம் ஆண்டில் 73.2 மில்லியன் டாலர்களாக இருந்த இந்த வர்த்தகம் இன்று 105 மில்லியன் டலர்களாக அதிகரித்துள்ளது.

ஆப்கானிலிருந்து ஜப்பான் கம்பளி, தோல்கள், விதை வகைகள். உலர்ந்த பழங்கள், ஆகிய பொருட்களை கொள்முதல் செய்வதை விஸ்தரிக்க விரும்புகிறது என்று மேற்படி நிறுவனத்தின் ஜப்பானிய கிளைத் தலைவர் வை. ஸுடோ தெரிவித்துள்ளார்.

"இரு நாடுகளுக்குமிடை நீண்டகால வர்த்தக, பொருளாதார உறவுகள் பேணப்பட்டு வருகின்றன. இவற்றைப் பெரிதும் விஸ்தரிக்கும் போக்கு அண்மைக் காலத்தில் தலையெடுத்துள்ளது. ஆப்கானுக்கு பொருட்களை விநியோகம் செய்யும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஜப்பான் முதலிடம் வகிக்கிறது. வானொலி எலக்ட்ரோனிக் சாதனங்கள், இயந்திரங்கள், போக்குவரத்து வாகனங்கள், அவற்றுக்கான உதிரிப்பாகங்களையும் வீட்டுப் பாவனைக்கான இயந்திர சாதனங்களையும் ஆப்கானுக்கு ஜப்பான் ஏற்றுமதி செய்கிறது'' என்றும் அவர் தெரிவித்தார்.

## பாலஸ்தீன அகதிகள் படுகொலை: விசாரணை கமிஷன் மீது சந்தேகம்

பேய்ரூத் மார்ச். 13

மேற்கு பெய்றூத், ஷப்ரா, ஷட்டிலா, பாலஸ்தீன பாசறை படுகொலைகளில் அமெரிக்காவுக்குச் சம்பந்தம் உண்டா?

இப்படுகொலையை விசாரணை செய்த டெல்அவிவ் கமிஷன்; பாதுகாப்பு அமைச்சருக்கு நேரடியான தொடர்பு இல்லை; மறைமுகமானதொடர்பு மாத்திரமே உள்ளது என்று தெரிவித்துள்ளது. இதன் காரணமாக சம்பந்தப்பட்ட இராணுவத் தளபதிகளான மேஜர் ஜெனரல் யெஹோஷுவா ஸகூமி, பிரிகேடியர் ஜெனரல் அமோஸ் யாரோன், லெப்டினண்ட் ஜெனரல் ரஃபயல் அய்டான் ஆகிய மூவர் மீதும் இலேசான தீர்ப்பே வழங்கப்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்தப் படுகொலையில் அமெரிக்காவின் பாத்திரம் குறித்து கமிஷன் தீர்ப்புக் கூறாமல் இருப்பது ஏனென்றும் இவ் வட்டாரங்கள் வினவுகின்றன.

"இதுபற்றி அமெரிக்காவுக்கு அக்கறையில்லை. இது உள்நாட்டு விவகாரம் இது குறித்து அமெரிக்கா அபிப்பிராயம் வெளியிடவோ தலையிடவோ கூடாது'' என்று ஜனாதிபதி ரொனல்ட் றீகன் எச்சரித்துள்ளார். அதேநேரத்தில் அமெரிக்காவிலுள்ள பாலஸ்தீன் மனித உரிமை இயக்கத்தின் தலைவரும், மத்தியகிழக்கு நிபுணருமான டொனல்ட் வக்னர் விசாரணைக் கமிஷனின் அறிக்கை பூரணமாக இல்லை என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

"கடலில் ஆழ்ந்து கிடக்கும் பனி மலையின் உச்சி மாத்திரமே இவர்களின் கண்ணுக்குப் புலப்பட்டுள்ளது'' என்று டொனல்ட் வக்னர் கூறியுள்ளார்.

"நான் ஷப்ரா ஷட்டிலா பாசறைகளுக்கு படுகொலை நடந்த மூன்று தினங்களுக்குப் பின்னர்சென்றேன். படுகொலை செய்யப்பட்டோர் 1500 பேரின் சடலங்கள் அகற்றப்படாத நிலையில் இருந்தன. படுகொலையிலிருந்து உயிர் தப்பியவர்களுடன் சம்பாஷித்தேன். படுகொலை பாலஸ்தீனர்களை அழிந்தொழிக்க நடந்த சதிஎன்பது தெரியவந்தது. ஷரோன், பெகின் ஆகியோருக்கு தெரியவந்ததுக்கு முன்னதாகவே அமெரிக்காவுக்கு படுகொலை பற்றித்தெரியவந்தது. இதுவே அநேக அமெரிக்கமத்தியகிழக்கு நிபுணர்களின் கருத்துமாகும்.

பாலஸ்தீனர்களைத் தாக்குவதற்கு ஒரேயொரு தினத்திற்கு முன்னர் ஏன் அமெரிக்க கடற்படை வீரர்கள் மேற்கு பேய்றூத்திலிருந்து வாபஸ்செய்யப்பட்டனர்? பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு துருப்புக்கள் வாபஸானால் பாலஸ்தீன அகதிகளுக்கு பந்தோபஸ்து வழங்கப்படுவதாக அமெரிக்கா எழுத்து மூலம் உத்தரவாதம் கொடுத்திருந்தது. இதுதான் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது'' என்று டொனல்ட் தெரிவித்தார்.

## வேலணையில் மகளிர் தினம்

[வேலணை]

சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை வேலணையில் மகளிர் பலர் கூட்டாகச் சேர்ந்து வேலணையிலுள்ள பல ஆலயங்களை துப்பரவு செய்யும் வேலைகளில் ஈடுபட்டனர். (சூ)

## கம்பியாவுக்கு தமிழக உப்பு நிபுணர்கள்

சென்னை, மார்ச், 13

மேற்கு ஆபிரிக்க நாடான கம்பியாவுக்கு உப்பு உற்பத்தி பற்றி விளக்கமளிக்க தமிழகத்திலிருந்து நால்வர் சென்றுள்ளனர்.

இந்த நால்வரும் வேதாரணியம் உப்பு விளைநிலப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஏற்பாட்டின்பேரிலேயே இவர்கள் அங்கு செல்கின்றனர்.

கம்பியாவில் சூரிய வெளிச்சத்தைப் பயன்படுத்தி உப்புச் செய்கை மேற்கொள்வதனை அறிமுகப்படுத்தி, அச்செய்கை பற்றிய விளக்கங்களை இவ்வுப்புச்செய்கை நிபுணர்கள் வழங்குவார்கள். [கி]

# ஸிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவர் பிரிட்டனில் புகலிடம்?

லண்டன், மார்ச் 13

ஸிம்பாப்வே எதிர்க்கட்சித் தலைவரான ஜோசுவா என்கோமா திடீரென ஜொஹனஸ் பேர்க்கிலிருந்து பிரிட்டன் வந்துள்ளார்.

கடந்தவாரம் திரு. என்கோமா ஸிம்பாப்வேயிலிருந்தும் தலைமறைவாக வெளியேறியிருந்தார். பின்னர் அண்டை நாடான பொட்ஸ்வானாவில் இவர் தஞ்சமடைந்திருந்தார்.

இவ்வாறு ஸிம்பாப்வேயில் இருந்தும் வெளியேற அந் நாட்டின் பிரதமர் திரு. றொபேர்ட் முகாபே தம்மைக் கொலைசெய்ய சதித்திட்டம் வகுக்கிறார் என்பதே காரணமென்று திரு. என்கோமா தெரிவித்துள்ளார்.

திரு. என்கோமாவின் கார்ச் சாரதி கடந்தவாரம் ஸிம்பாப்வே பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. இக் கொலையையடுத்தே திரு. என்கோமா தலைமறைவாக ஸிம்பாப்வேயிலிருந்து வெளியேறினார்.

'பிரிட்டிஷ் எயர் வேஸ் விமான மொன்றிலேயே இவர் இங்கிலாந்து வந்துள்ளார் என்றும் இங்கு அரசியல் புகலிடம் கோருவதே அவரது நோக்கமென்றும் இவ்விமானச்சேவையைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

ஆனால் பிரிட்டிஷ் வெளிநாட்டு அலுவலகம் இதுவரை என்கோமா புகலிடம் கோருவது பற்றி எதுவும் அறிவிக்கவில்லை என்று தெரிவித்தது. [கி]

## அரை இறுதிக்கு இந்திய வீரர்கள் பிரவேசம்

கோலாலம்பூர், மார்ச்,13

மலேஷியாவின் கோலாலம்பூரில் ஆசிய டென்னிஸ் சாம்பியனுக்கான பந்தயங்கள் நடைபெறுகின்றன.

இந்திய வீரர்களான ஆனந்த் அமிர்தராஜ், சசி மேனன் ஆகியோர் அரை இறுதி ஆட்டங்களுக்குப் பிரவேசித்துள்ளனர்.

ஆனந்த் அமிர்தராஜ் தமது எதிரணிவீரரை 6-3, 6-1 என்ற ரீதியில் வென்றார். சசி மேனன் 6-3, 6-2 என்ற ரீதியில் வென்றார். (கி)

## மணிவாக்கு

பத்திரிகைச் சுதந்திரமுள்ள நாட்டில், எல்லோரும் படிக்கும் ஆற்றல் உடையவராயின், வேறு எந்தப் பாதுகாப்பும் தேவை இல்லை.

—தோமஸ் ஜெபர்ஸன்

# நமது நோக்கு

## தோழமை

மனிதனை நடமாடும் கோயிலெனக் கொள்ளும் பண்பு எங்கள் சமய சமுதாய பண்பு. ஆனால் சமயம் சமுதாயத்தில் வேண்டிய அளவிற்கு ஊருடுவுகின்றதா?

இதில் உருவானதோழமை உண்மையான தோழமையானாலும் இது உலகை ஒரு புயல் போல் ஆட்டி வைக்கவில்லை. உதட்டால்தோழன் என்றும் உள்ளத்தில் பகைவன் என்றும் கொள்வதற்கு சமுதாயத்தில் பல தீங்குகள் காரணமாகின்றன,

இந்த நூற்றாண்டு கண்ட மார்க்சீயம் பரப்பிய தோழமை உலகு நன்கறியும்; பொருளாதார, சமத்துவத்தால் ஏற்பட்ட அரசியல் நிர்வாகம் ஏற்படுத்திய பண்பு.

ஹிட்லரின் படைகள் அகில உலகுக்கும்ஆபத்தை விளைவிக்கும் சமயத்தில் சோவியத் ரஷ்யாவின் ராணுவபலமும், தோழமை சுவாலித்த தேசபக்தியும் ஜெர்மன் எதேச்சாதிகாரத்தைத் தோற்கடித்தது; சுதந்திரக்காற்றை உலகம் சுவாசித்ததற்கு உறுதுணையானது சோவியத்பலம்.

இத் தோழமையின் தாத்தா கார்ல் மார்க்ஸ் (Karl marx) மறைந்து இன்று ஒரு நூற்றாண்டுமுடிவடைகின்றது. அன்றைய உலகம் அவரை நன்கறியாது; இன்று அவரை அறியாதவர் ஒன்றும் அறியாதவரே?

ஒரு தத்துவஞானியாக வாழ்க்கையை விளங்க முற்பட்ட இப்பெருமகன் தத்துவம் உலகின் இயல்பை விளக்குவதுடன் நின்றுவிடுகிறதென்பதை உணர்ந்தார்; உலகை மாற்றியமைக்க வேண்டுமே; வறுமையை ஒழிக்க வழியில்லையா? என்ற கேள்விகள் எழுந்தன.

பொருளாதாரத் துறையை நன்றாகப்படித்து, பிரிட்டிஷ் மியூசியத்தில் இரவும் பகலுமாக பல ஆராய்ச்சிகள் நடத்தி கண்ட முடிவுகளே இன்று 'மூலதனம்' என்ற உலகின் பிரபல நூலாக விளங்குகின்றது; இதனைப் புரியும் ஆற்றல் பெற்றவர் மிகச்சிலரே.

இன்று சரியாக 100ஆண்டுகளுக்கு முன் (14-3-1883) லண்டனில் அவர் இறந்தபோது மார்க்கிஸீயம் என்ற தத்துவம் அதிகம் அறியப்படாததொன்று. மார்க்ஸ் முனிவரே இன்றைய உலகப்புகழ் அன்று பெற்றிருக்கவில்லை.

குடும்பஸ்தராக இருந்தபோதும் மானிட வர்க்கத்தின் பரந்த கருத்துக்களும் பிரச்னைகளும் அவரை முற்றாகக் கவர்ந்திருந்ததென்றால் அவரை முனிவரென்று கொள்வதற்கு என்ன தயக்கம்?

அவர் மறைவுக்குப் பின் அவருடைய தோழமை யென்னும் ஆழ்ந்த இலட்சியம் சோவியத் ரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும், சீனாவிலும் ஒரு புதிய வாழும் முறைமையே உருவாக்கி, உலகில் பல பாகங்களிலும் பரவி மனித வாழ்வுக்கு ஒரு புதிய ஒளியை ஊட்டுவித்திருக்கிறது. இதனை முதலாளித்துவ கொள்கையை ஆதரிக்கும் பகைமை நாடுகளும் ஒப்புக்கொள்ளவேண்டும். அவருடைய தத்துவம் காலகதியில் அடையும் மாற்றத்தை நாம் இங்கு ஆராய முற்படவில்லை.

பொருளாதாரமே மனித வாழ்வின் எல்லா அம்சங்களுக்கும் அத்திவாரம் என்ற கருத்தை எல்லோரும் ஒத்துக்கொள்ள முடியாது; அது ஒரு பூரண உண்மையில்லையாயினும், அக்கொள்கையின் தாக்கம் தொழிலாளிகளின் மேம்பாடு. இன்று எங்கள் நாட்டைப்போல முதலாளித்துவத்தில் உழல்கின்ற பல ஏழை நாடுகளுக்கும் ஒரு வரப்பிரசாதமென்று கொள்ளும் வகையில் பரவியிருக்கிறது.

மானிட நேயமே மார்க்சீயத்தின் குணப் பண்பு; உயர்வு தாழ்வு, ஏழை பணக்காரன், அறிவுள்ளவன், அறிவற்றவன், இனம், மொழி, நாடு என்ற பாகுபாடுகள் கடந்து, பரந்து, ஆழ்ந்து பற்றிக்கொள்ளும் உன்னத பண்பாகிய 'தோழமை' யின் பெயரால் இன்றைய நன்னாளில் மார்க்ஸ் முனிவர் நாமம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

# கார்ல்மார்க்ஸின் நினைவுகள்

(இன்று உன்னதசிந்தனையாளரும், விஞ்ஞான கம்யூனிஸத்தின் மூலவரும், தொழிலாளி வர்க்கத்தின் வழிகாட்டியுமான கார்ல் மார்க்ஸின் 100வது நினைவு தினமாகும்.)

கார்ல்மாக்ஸ் வசதியான யூத குடும்பத்தில் 1818-ஆம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி பிரஸ்யாவிலுள்ள டிரியர் நகரில் பிறந்தார். தனது பட்டப் படிப்பினை பல்கலைக் கழகங்களில் மேற்கொண்டிருந்தவேளை அங்கு சட்ட இயல்-வரலாறும் தத்துவஞானமும் பயின்றார். 1841ல் தனது பட்டப் படிப்பை முடித்து தத்துவத்துக்கான ஆராய்ச்சித் துறையில் கலாநிதிப் பட்டம்பெற்று வெளியேறினார். இயல்பாகவே புரட்சிகரப் போக்குள்ள இவர் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியை விரும்பாது பலநூல்களை எழுதியதுடன், பலபத்திரிகைகளில் ஆசிரியராகவும்இருந்தார். மார்க்ஸ் உலகத் தொழிலாள வர்க்கத்தின் விமோசனத்துக்காக போராட்டத்தில் தனது ஆற்றல் முழுவதையும் ஈடுபடுத்தி உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் செயல்பட்டார். இத்தகையபோராட்டம் தான் அவருடைய வாழ்வின், பணியின் உன்னத இலட்சியமாக விளங்கியது. வரலாற்று வழிப்பட்ட வளர்ச்சிப் பாதையில் தன் முன்வைக்கப்பட்ட எதிர்கருத்துகள்கேள்விகளுக்கு மார்க்ஸ் விஞ்ஞான பூர்வமான கண்ணோட்டத்துடன் பதிலளித்தார். அதன்படியாக அறிவியல் அரங்கில் தனது மேலான பங்களிப்பினை நிலை நிறுத்தினார். மனிதவர்க்கத்தின் சமூக உணர்வில், சிந்தனையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி தொழிலாளி வர்க்கத்தின் மீது சர்வதேசப் பார்வையைத் திருப்பினார். இவரின் விஞ்ஞான பூர்வமான கண்ணோட்டம் வரலாற்றின் வளர்ச்சி விதியை ஆதாரமாகக் கொண்டுவளர்த்தெடுக்கப் பட்டது.

மார்க்ஸ் தனக்கு முன்பு இருந்த அறிஞர்களால் முன் வைக்கப்பட்ட சோசலிசக் கருத்தினை விஞ்ஞான பூர்வமான கருத்தாக மாற்றி, முதலாளித்துவம் வீழ்ச்சியுறுவதும் கம்யூனிசம் வெற்றிவாகை சூடுவதும் தவிர்க்கமுடியாத வரலாற்று நியதி என எடுத்துரைத்தார்.

முதலாளித்துவ சுரண்டல் அமைப்புக்குச் சமாதி கட்டி சோசலிச சமுதாயத்தை நிர்மாணிக்கும் வரலாற்றுப்பணி தொழிலாளி வர்க்கத்தைச் சார்ந்தது என்ற போதத்தை மார்க்ஸ் தொழிலாள வர்க்கத்துக்கு உணர்த்திக் காட்டியதுடன் அதற்கான வழிமுறைகளையும் காட்டியுள்ளார்.

### மார்க்ஸும் தோழரும்

இவ்வாறான பணியிலும் தன் வாழ்க்கையின் துன்ப துயரங்களிலும் தனது நெருங்கிய நண்பரும், தோழருமான ஏங்கல்சின் ஆதரவினைப் பெற்றிருந்தார். இவர்கள் இருவரும் சேர்ந்தே "உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்!" என்றகோஷத்தின் அடிப்படையில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கங்களைக் கட்டும் பணியினை ஆரம்பித்து வைத்தனர்.

### கம்யூனிஸ்ட் அறிக்கை

"இன்று வரையுள்ள சமுதாயத்தின் வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறு தவிர வேறில்லை" என்றும் "முதலாளி வர்க்கத்துக்கு எதிர் நின்று சவால் விடும் வர்க்கங்களில் உண்மையான புரட்சித் தன்மை கொண்ட வர்க்கம் தொழிலாள வர்க்கம் தான்" என்றும் மார்க்ஸும் ஏங்கல்சும் விஞ்ஞான ரீதியான கம்யூனிச சித்தாந்தத்தின் கொள்கைத் திட்டத்தை விளக்கும் "கம்யூனிஸ்ட் அறிக்கையில்" 1848-ம் ஆண்டிலேயே கூறியுள்ளனர்.

மார்ஸ், ஏங்கல்சின் மிகச் சிறந்த படைப்புக்களில் ஒன்றான "கம்யூனிஸ்ட் அறிக்கை" பற்றி லெனின் கூறும்போது "அருமையான அதேவேளை தெட்டத் தெளிவான உலகப் பார்வையையும், வர்க்கப் போராட்டத்திற்கான விஞ்ஞான பூர்வமான சித்தாந்தத்தையும் அது நமக்கு அளித்திருக்கிறது" என்கிறார்.

மார்க்சின் சிந்தனையில் உருவாகிய தத்துவம் உலோகாயதம் அல்லது பொருள் முதல் வாதம் ஆகும். இதனை அவர் தனது நுண்ணறிவினால் செழுமைப்படுத்தி உலகிற்கு விரித்துரைத்தார்.

### செயற்பாட்டுக்கு ஏற்ற தத்துவம்

உலோகாயத வாதத்தைத் தர்க்கவியலுடன் இணைத்துத் தனது பொருள் முதல் வாதக்

(5-ம் பக்கம் பார்க்க)

—மு. அநுதரட்சகன்—

# வம்மின்! போமின்!

வடக்கும் தெற்கும் இந்த நாட்டின் வெவ்வேறு பகுதிகளல்ல; வெவ்வேறு நாடுகளே என்ற பாங்கில் இன்று நிகழும் சம்பவங்கள் பல! இந்த நிலையில் தனி நாடு கோருவதில் தவறென்ன? என்று நினைப்பது இயற்கை.

கிழக்கின் கதை என்ன? என்ற கிண்டலுக்கு மிடமுண்டு. கிழக்கு வெளிக்கிறதென்று துணிவாக விடையளிக்கலாம். அங்கும் இன்னும் குழப்பம் அடங்கிய பாடில்லை.

நாம் குறிப்பாகக் கருதுவது பல்கலைக்கழக மாணவர்களின் குழப்பநிலையே! வடக்கில் தனியார் வீடுகளில் தங்கியிருக்கும் சுமார் 500 மாணவர்கள், ஆயுதப் படையினரின் விசாரணைகள் ஏற்படுத்தும் இடைஞ்சல்களால் வீடுகளைவிட்டு பெட்டிகளுடனும், படுக்கைகளுடனும் பல்கலைக்கழகத்தில் தஞ்சம்புகும் பரிதாப நிலை. சுமார் நூறு மாணவர்கள் பல்கலைக்கழகத்துள் நுழைந்திருக்கின்றனர். இவர்கள் வெளியூர் மாணவர்கள்.

தெற்கில் வரலாற்றுப் பெருமையுடைய ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பை முடிவுகட்ட அவர்களை வரவென்றழைக்கின்றனர். பொலிசார் மாணவர்களுக்குக் காட்டும் பரிவு அளப்பரியது. 'வம்மின், உங்களுக்கும் பெற்றோருக்கும் போதிய பாதுகாப்பு.'

யாழ்ப்பாண மாணவர்கள் 'மண்'; கொழும்பு மாணவர்கள் 'பொன்' என்று கருதப்படுவதால் இவ்வாறு நடக்கின்றதா? என்ற கேள்வி எழுவது இயற்கை.


நாடு ஒன்று; ஆட்சி ஒன்று.

யாழ். மாணவர் வசிக்கும் இடமெல்லாம் ஒரு பயங்கரவாதி பதுங்கியிருக்கும் பற்றையுண்டு என்ற நம்பிக்கை, கோட்டே ஜயவர்த்தனபுர மாணவர்களின் பல்கலைக்கழக பகிஷ்கரிப்பு தங்கள் ஆட்சிக்கு ஒரு இழுக்கு என்ற கருத்து! இந்த வகையில் ஏற்பட்ட வேறுபாடுகளா இவை?

பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு குலம்; ஒரு இனம்; எல்லோரும் இந்நாட்டு வருங்கால மன்னர்; வேறுபாடு வேண்டாம்; அது மாறுபாட்டைக் கொண்டுவரும் என்பதே எமது கருத்து.

மாணவ சமுதாயத்தில் அடிப்படை ஒற்றுமை இருப்பது நல்லகுறிகுறி. அதிகாரிகளின் கண்கள் விழிப்படைய வேண்டியதே இன்றைய தேவை!

### தவக்கால நற்சிந்தனை



## அன்பு என்பது மனமாற்றம்

கடவுள் நம்மை அன்பின் பிள்ளைகளாக ஏற்று அன்பு செய்தார். அவரே நமக்கு அன்பு செய்து நம் பாவங்களுக்குப் பரிகாரமாக தம்மகனை அனுப்பியதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது." நாம் அவருக்கு காட்டும் பிரதி அன்பு பாவவாழ்வை விட்டு மனம் திரும்பி கடவுளுக்கு ஏற்புடைய வாழ்வு வாழ்தலாகும். ஏனெனில் "பாவத்தில் வாழும் எவனும் கடவுளைக் கண்டதுமில்லை அறிந்ததுமில்லை" எனவே எமது அன்பு அடிப்படை மனமாற்றத்திலும் அவரின் திருச்சட்டத்தை ஏற்று வாழ்வதிலும் அமையட்டும்.

அருட்செல்வன் ம. ரூபன்

# உண்மைகள் உறங்குவதில்லை

## மக்கள் கருத்து

கடந்த 5-3-1983ம் திகதி சனிக்கிழமைய ஈழநாடு இதழில் நமது நோக்கு பகுதியில் வட்டுக்கோட்டை என்ற தலைப்பில் மதிப்புக்குரிய ஆசிரியர் தீட்டிய கருத்துக்களை வாசித்து ஆழமாகச் சிந்தித்தவர்கள் பலர். அவர்களில் நானும் ஒருவன்.

ஈழநாடு இதழை கையில் எடுத்ததும் தினமும் 'நமது நோக்கை முதலில்' ஆர்வத்துடன் வாசிப்பவன் என்ற வகையில் வட்டுக்கோட்டைத் தொகுதி அன்பரின் 'விளக்கக் குறைவுக்கு' விளக்கம் கொடுக்க விரும்புகிறேன்.

முதலில் குறிப்பிட்ட நேயர் நினைப்பதுபோல் ஆசிரியர் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் தெரியாத அரசியல் நிலைமை தெரியாதவரல்ல

அடுத்து தாங்கள் 'தியாகராஜாவுக்கு இட்ட வாக்குகள் சோற்றுக்கு இட்ட வாக்குகள்' என்று ஆசிரியர் குறிப்பிட்டதை கண்டித்துள்ளீர்கள். ஆசிரியர் கூறியது முற்றிலும் உண்மையே. 1970ல் நடைபெற்ற தேர்தலிலே 'சோறு? சுதந்திரமா' என்ற கேள்வியே வாக்காளர் கையில் இருந்தது.

அடுத்து மறைந்த அமரர் 'திரு' தொகுதியில் நிற்காமல் போனதால் மக்கள் நலனைக் கவனிக்கவில்லை என ஆசிரியர் குறிப்பிட்டதாக நேயர் எழுதியுள்ளார். இது பத்திரிகையை ஒழுங்காக வாசிக்காத அவசர புத்தியைக் காட்டுகிறது. ஆசிரியர் மக்களால் தெரிவான அமரர் திருநாவுக்கரசு தமிழர் கூட்டணி பிரமுகர்; தொகுதியில் வாழ்ந்து மக்கள் நலனைக் கவனிக்கமுடியவில்லையென்ற முறைப்பாடு பரவலாகப் பேசப்பட்டது". என்றே கூறியுள்ளார். இதை ஒருபோதும் தனது கருத்தாக ஆசிரியர் தெரிவிக்காதபோதிலும் இந்த முறைப்பாட்டை மக்கள் தெரிவிக்கவில்லை என்று யாராலும் மறுக்கமுடியாது. 'திரு' உயிருடன் இருந்தபோது பரவலாக இந்த முறைப்பாடு கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது முற்றிலும் உண்மை.

மற்றுமொரு குற்றச்சாட்டு குட்டிமணியின் நியமனம்பற்றி எதையும் ஆசிரியர் எழுதவில்லை என குறிப்பிட்டுள்ளீர். ஒழுங்காக ஈழநாடு வாசிப்பவராக இருந்தால் விஷயம் புரியும். குட்டிமணி நியமனமான ஒருசில தினங்களில் அது குறித்து ஒரு ஆசிரிய தலையங்கமே தீட்டியதை யாவரும் அறிவர். அதுமட்டுமல்லகடந்த மாதம் ஆசிரியர் தீட்டிய 'ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்' என்ற தலையங்கத்தை வாசித்தவர்கள் ஆசிரியரின் அறிவு முதிர்ச்சியை புரிந்து கொள்வர்.

அடுத்து திரு, விக்சன் அவர்களை எதிர்க்காக இறக்கி இழுத்தீர்கள் என்று கேட்கப்பட்டுள்ளது. ஆசிரியர் டாக்டர் "நீலனென்றாலென்ன? டாக்டர்விக்சனென்றாலென்ன இவ்வித நிபுணர்கள் எந்தக் கட்சியிலும்தேர்தலில் நின்று மக்கள் அங்கீகாரம் பெறுவதே அவர்கள் தகைமைக்குரிய சிறப்பாகும்" என்று தெரிவித்துள்ளார். கௌரவ ஆசிரியருக்கு நீலனை அல்லது விக்சனை அல்ல நீக்கனைக்கூட

(8-ம் பக்கம் பார்க்க)

# "நாம் வகுப்புகளை பகிஷ்கரிப்பது அரசியல் காரணங்களுக்காக அல்ல!"

## யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இன்று நிலவும் பதட்ட நிலைமை காரணமாக வகுப்புகளுக்குச் செல்லவில்லையேயொழிய; அரசியல் காரணங்களுக்காக அல்ல'' என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு. வ. சு. ஸ்ரீஸ்கந்தராசா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இன்று நிலவும் பதட்டநிலை காரணமாக மாணவர்களாகிய நாம் விரிவுரைகளுக்குச் செல்லமுடியாமலுள்ளது. பாதுகாப்பற்ற நிலையில் வாழும் மாணவர்கள் எந்நேரத்திலும் கைதுசெய்யப்பட்டு, பல்வேறுபட்ட இன்னல்களிற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இந்த நிலைமை பற்றி நான் முதலில் உப-வேந்தருடன், இராணுவ அதிகாரிகளிடம் நேரில் சென்று முறையிட்டிருந்தேன். ஆனால் சென்ற நாட்கள் நிகழ்ந்த நிகழ்வுகள் பல்கலைக்கழக மாணவர்களின் மனநிலையைக் குழப்பியுள்ளது. எவ்வித ஆதாரங்களுமின்றி கைதுசெய்யப்படுவதும் துன்புறுத்தப்படுவதும் அவர்கள் அறைகள் சோதனையிடப்படுவதும் அவர்களுடன் காட்டுமிராண்டித்தனம் பிரயோகிக்கப்படுவதும் சாதாரண நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. நிம்மதியற்ற பதட்டமான மனோநிலையில் வெறும் கடமைக்காகத்தான் விரிவுரைகளுக்குச் செல்லலாமே தவிர மனதைப் படிப்பில் செலுத்த முடியாத அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது. இதனைப் பிரதி பொலிஸ்மா அதிபர், இராணுவ அதிகாரிகள் தமது கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான சகல நிலைமைகளையும் விளக்கி, இன்று ஜனாதிபதி உயர்கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியோருக்கு மாணவரவை சார்பில் கடிதம் எழுதியுள்ளேன்.

"மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரிக்கவில்லை. அவர்களது மனோநிலை சரியாக இல்லாத காரணத்தால் அவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல முடியாமலுள்ளது. அரசியலில் ஈடுபட வேண்டும் என்றோ, அரசாங்கத்திற்குத் தலையிடி கொடுக்க வேண்டும் என்பதோ எமது நோக்கமல்ல. உயர்கல்வி பெறுவதே எமது நோக்கம். அமைதியான மனோநிலை இருந்தால்தான் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியும். நேற்றையதினம் கைதுசெய்யப்பட்ட மாணவர்கள்பற்றி அவர்களது உறவினர்கள் சகோதரர்கள் திருகோணமலையிலிருந்து வந்து முறையிட்டு ஆவன செய்யும்படி வேண்டினர். பின்னர் நானும் சென்று பல்கலைக்கழக பதிவாளர் திரு. எஸ். எஸ். தர்மபாலனிடம் நிலைமைகளை விளக்கினேன். பதிவாளர், அரசாங்க அதிபருடன் பின்னர் உடன் தொடர்புகொண்டு துரித நடவடிக்கை எடுத்ததன்பேரில் இரு மாணவர்கள் நேற்றுமாலை 6-30 மணியளவிலும், ஒருவர் நேற்றிரவும் விடுதலை செய்யப்பட்டனர். தொடர்ந்து மாணவர்கள் தமது ஏனைய கோரிக்கைகள் பற்றியும், மாணவரவையிடம் தங்கள் கருத்துக்களை தெரிவித்து, அவற்றிற்கு தீர்வுகாணுமாறு வேண்டி உள்ளனர். இதுசம்பந்தமாக நேற்றையதினம் உபவேந்தர் வித்தியானந்தன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதால், அவர் குணமடைந்தபின்னர் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்படும். தீர்வு கிடைக்கும் பட்சத்தில் மாணவர்கள் விரிவுரைகளுக்குத் திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [மா)

## கார்ல்மார்க்ஸின்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்கையை முன்வைத்தார், அதனை உலகுக்கு விளக்கும் பணியை ஏங்கல்ஸ் செய்தார். மார்க்ஸ் தனக்கு முந்திய தத்துவவியலின் ஊகத்தை அடிப்படையாகக் கொண்ட தன்மையினின்றும் விலகித் தத்துவவியலுக்கு செயலூக்கமான, மாற்றமேற்படுத்தும் இயல்பைக் கொடுத்தார். அதைச் சமுதாயத்தின் வரலாற்றுவழிப்பட்ட நடைமுறையுடன் நெருக்கமாகப்பிணைத்து ''தத்துவவியலாளர்கள்'' உலகத்தைப் பல்வேறு வழிகளில் வியாக்கியானம் செய்வதுடன் மட்டும் நின்று விட்டனர். ஆனால் முக்கியமான எமது பணி அதனை மாற்றியமைப்பதுதான் நடைமுறைக்கு உரியதாகும் என்று சுட்டிக்காட்டினார்,

### கூலிகள் ஏமாற்றப்படும் உண்மை

மார்க்ஸ் தனது முக்கிய படைப்பான மூலதனத்திலும்) இதர நூல்களிலும் முதலாளித்துவ சமுதாயத்தின் இயக்கத்துக்குரிய பொருளாதார விதிகளையும், முதலாளித்துவச் சுரண்டலின் நுட்ப அமைப்பினையும் தெளிவு படுத்தி, கூலித் தொழிலாளர்களின் உழைப்பினுடைய கூலிகொடுபடாத பாகத்தின் உற்பத்திப் பொருளை முதலாளிகள் அபகரிக்கின்றனர் என்பதை உலகுக்குக் காட்டினார். அதன் அடிப்படையில் எழுந்த தத்துவமானது மார்க்சின் பொருளாதாரக் கொள்கையினுடைய உயிர்நாடியாகக் கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலும், உற்பத்தியின் சமூக இயல்புக்கும், அதன் பயனை தனிப்பட்ட முதலாளிகள் அபகரித்துக் கொள்வதற்கும் இடையிலும் உள்ள முரண்பாட்டை மார்க்ஸ் விளக்கினார்

மார்க்ஸ் தத்துவவியலுடன் மட்டும் தனது ஆராய்ச்சித் திறனை எல்லைப்படுத்திக் கொண்டிராது, கலை இலக்கியம், சட்டம், இயற்கை விஞ்ஞானம், பொருளியல், சமூகவியல் எனப் பலதரப்பட்ட துறைகளிலும் ஆளுமை மிக்க ஆற்றலினை வெளிப்படுத்தினார்.

### துன்பியல்

மார்க்ஸ் வாழ்ந்த வாழ்க்கைப் பாதை மிகவும் கடினமானதாகவும் சோதனைகள் மிகுந்ததாகவும் இருந்தது. அவர் அரசியலுக்காக எல்லா ஐரோப்பிய நாடுகளின் பிற்போக்கு சக்திகளாலும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு பல முறை நாடுகடத்தப்பட்டார். முதலாளித்துவ வர்க்கத்தின் கைக்கூலிகளால் வேட்டையாடப்பட்டதுடன் கொடிய வறுமைக்கும் உள்ளாகித் துன்பப்பட்டார். ஆனால் தொழிலாளி வர்க்கப் புரட்சியில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த மார்க்ஸ், சகல சோதனைகளையும் வீரமுடன் சமாளித்தார்.

### கொள்கைச் சிறப்பு

மார்க்ஸின் கொள்கைகள் இன்றைய காலகட்டத்தில் அறிவுக் கருவூலமாகும். இவர் கொள்கைகள் சுதந்திரம், மனச்சாட்சி, விடுதலை என்பவற்றுடன் இணைந்துள்ளது. உலகெங்கணும் பல நாடுகளிலும் இத்தகைய தத்துவத்தின் அடிப்படையில் கட்டியமைக்கப்பட்ட பல கட்சிகள் கம்யூனிஸ்ட் அல்லது தொழிலாளர் கட்சிகள் என்ற பெயரில் உள்ளன. பல முதலாளித்துவ நாடுகளில் வாழும் மக்கள் மார்க்ஸிஸ தத்துவத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக தேசிய விடுதலைக்காகப் பரவலான இயக்கங்கள் நடந்துவரும் நாடுகளிலும் மார்க்ஸியக் கொள்கையின் வீச்சு ஆழமானதாக இருக்கின்றது.



## "சேவையைப் பெரிதாக மதித்தார்"

தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல்; மகன் தந்தைக்காற்றும் உதவி, இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும்சொல் என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் தான் அமரர் பொன்னுத்துரை. இரண்டாவது மகாயுத்தத்தின் பின், குறிப்பாக வலிவடக்கில் வசிக்கும் எவருக்கும், பரவலாக வடமாகாணத்தில் வசிப்பவர்களுக்கு 'பிரதமரைம் கீப்பர்' பொன்னுத்துரை என்றால் மனதில் பதிந்துவிடும்.

தனது கல்வியை தெல்லிப்பளை அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையிலும், பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையிலும் இறுதியில் இளவாலை செல் ஹென்றிக் கல்லூரியிலும் பயின்று, இருபதாவது வயதில் திருகோணமலை விமானத் தளத்தில் வேலைக்கு அமர்ந்து பின்னர் பலாலி விமானத் தளத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட இவர் அமைப்பு வேலையில் ஆறுயிரம் பேர் கடமையாற்றி பொறுப்பதிகாரிகள் யாவரும் வெள்ளையர்களாக இருந்தபோது தமிழர்களில் உயர்ந்த பதவியை வகித்தவர் திரு. பொன்னுத்துரை என்பது குறிப்பிடத்தக்கது. நீதி, நியாயம், நேர்மை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தயவு தாட்சணியத்தில் மேம்பட்டு விளங்கினார். இவரது கடமைத் திறனையும் நேர்மையையும் கண்ட வெள்ளையர்களும் இவரால் நன்மை பெற்ற மக்கள் யாவரும் அன்னாரை வாயாரப் புகழ்ந்தனர். பலாலி விமானத்தள வேலை முடிந்ததும் கட்டுநாயக்காவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கும் சிங்கள மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் வேலைசெய்த போதிலும் புகையிரத சேவையில் கடமையாற்றியபோதும் தம்மாலான சேவையை ஒரு தொண்டாக மதித்து கடமையாற்றினார். இவர் ஒரு சிறந்த ஓவியராக இருந்ததுடன் நகைச்சுவை இவரின் இயல்பான குணமாக இருந்தது. இவரிடம் கோபம் என்ற சொல்லிற்கே இடம் இருக்கவில்லை. அன்னாரின் முதலாவது சிராத்த தினமான கடந்த 10-ம் திகதி வலிவடக்கு ஆலயங்களில் ஆராதனையும் ஞானவயிரவர் கோவிலில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

— வ. தங்கராசா

## ரூப வாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள். |
| 6-01 | சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்] |
| 6-30 | 'பிக்புளுமாபிள்' சிறுவர் நிகழ்ச்சி [ஆங்கிலம்] |
| 7-00 | செய்திமஞ்சரி [தமிழ்] |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-15 | ஆபிரிக்க மிருக வைத்திய சாலைகள் பற்றிய ஆங்கில நிகழ்ச்சி |
| 8-15 | செய்திமஞ்சரி [சிங்களம்] |
| 8-29 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 8-30 | கலை நிகழ்ச்சி [சிங்களம்] |
| 9-00 | விவரணச் சித்திரம் [சிங்களம்] |
| 9-30 | செய்திமஞ்சரி [ஆங்கிலம்] |
| 9-45 | 'ஸ்வாரீட்' கொமாண்டோ பொலிஸாரின்சாகஸங்கள் [ஆங்கிலம்] |
| 10-40 | ஒளிபரப்பு முடிவு |


25 வருட அனுபவமிக்கவர்களால் நடாத்தப்படும்
நிதிநிறுவனம்

- வாகனங்களுக்கு அதிவிஷேட சலுகைகளுடன் முத்திரைச்செலவின்றி கடன்வசதி :———75% வரை.
- பிறின்ஸ் வசதி அறிமுகப்படுத்துவோருக்கு கமிஷன் வழங்கப்படும்.
- சோனி - நஷனல் போன்ற ரி. வி. மின்சார உபகரணங்கள்; ஏனைய வீட்டுப் பாவனைப்பொருட்களுக்கு கடன் வசதி.
- உடனடியாக வாகன ''சுவிச்'' சாவி செய்து கொடுக்கப்படும்.
- காணி அபிவிருத்தி, கடன் வசதி.
- முதலீடு சம்பந்தமாக எமது பொருளாதார நிலையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

த சென்றல் பிறின்ஸ் கம்பெனி லிமிட்.,
250, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
சிவன்கோவிலடி - - போன் : 24360.



புதிய "லக்ஸ்பிறே"

இந்நாட்டில் எல்லோரும் விரும்பி சுவைக்கும் பால் உணவு இப்பொழுது புதிய அழகான 500 கிறாம் பக்கற்றுகளில் அடைக்கப்படுகிறது.
வியாபாரிகளே!
உங்கள் தேவையை நாம் உடனே பூர்த்தி செய்யத் தயாராக இருக்கிறோம்.
யாழ், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உத்தரவு பெற்ற விநியோகத்தர்கள்:
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்,
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22134, 23819

# ஆட்டிறைச்சி விலையை மீளாய்வுசெய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஆட்டிறைச்சி நிர்ணய விலையை மீளாய்வு செய்யும்படி கோரி யாழ். ஆட்டிறைச்சி விற்பனையாளர்கள் சங்கச் செயலாளர் ஜனாப் எஸ். எம். சுல்தான், உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''மேற்படி விடயமாக எங்கள் சங்க உறுப்பினர் அனைவரும் கூடி இறைச்சி விலையை நிர்ணயம் செய்வதற்காக ஆலோசனை நடாத்தினோம். அவ்வாறான ஆலோசனையின் போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆட்டிறைச்சி வியாபாரிகளுக்கு ஆடுகளை விநியோகம் செய்பவர்களின் ஆலோசனையையும் பெறவேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. ஏனெனில் அவர்கள் எங்களுக்கு விநியோகம்செய்து வரும் ஆடுகளின் விலையையும் தாங்களே நிர்ணயம் செய்ய முடிவு செய்துள்ளதாக தாங்கள் அறியநேர்ந்தது. ஆகவே ஆட்டிறைச்சி விலையை மீளாய்வு செய்து நிர்ணயம் செய்யும்போது ஆடுகள் விநியோகம் செய்பவர்கள் பிரதிநிதிகளையும் சேர்த்து அவ்வாறான ஆலோசனையை நாங்கள் மேற்கொள்வதே சாலச்சிறந்தது. அவர்களுக்கும் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளபடியால் அச்சங்கத்தின் முக்கியஸ்தர்களையும் எங்கள் சங்கத்தினரையும் உள்ளடக்கிய ஒருதாகோஷ்டியிடம் தாங்கள் ஆலோசனை நடாத்துவதுதான் பயன் அளிக்கக்கூடியது. அச்சங்கத்தின் விலாசம் யாழ் ஆட்டு வியாபாரிகள் சங்கம் (தலைவர் எம். ஓம். றகீம், காரியதரிசி, எம். கே. இஸ்மதி 151 முஸ்லீம் கல்லூரி வீதி யாழ்ப்பாணம்)

எனவே 15-3-83 அன்று தாங்கள் நடாத்தவிருக்கும் ஆலோசனைக் கூட்டத்துக்கு மேற்படி ஆட்டு வியாபாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளையும் அழைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.''

மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர், யாழ் மாநகர சபை முதல்வர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (மா-அ)

## பொதுக்கிணறு நிதி ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பண்டத்தரிப்பு யத்திமாதா ஆலயத்திற்கு சமீபமாக குடியேறியுள்ள மக்கள் நலன் கருதி அமைக்கப்பட்டுவரும் பொதுக் கிணறின் தொடர்வேலைகளுக்கு இவ்வாட வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மேலும் 12 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இக்கிணறு அமைப்பதற்கு 10 ஆயிரம் ரூபாவை மறைந்த வட்டு எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஒதுக்கீடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வரணி கண்ணகை கும்பாபிஷேகம்

(சுண்டுக்குளி)

வரணி வடக்கு-சிமிழிற் கண்ணகை அம்பாள் ஆலய சம்புரோட்சண கும்பாபிஷேகம் இம்மாதம் 23 ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

14 ஆண்டுகளாகத் திருவிழாக்கள் நடைபெறாது இருந்த இவ்வாலயத்தில் பொதுமக்கள் ஒன்றுதிரண்டு முன்வந்து கும்பாபிஷேக ஒழுங்குகளைச் செய்துள்ளனர். (ப)

## குடாரப்பு கொலைமுயற்சி வழக்கு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நாகர்கோவில் குடாரப்பு கொலை முயற்சி வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஆர். ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 78 டிசம்பர் 27ம் திகதி குடாரப்பில், ஞானப்பிரகாசன் அல்பிரட் என்பவரைக் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயன்றதாகவும், மரியாம்பிள்ளை மரியதாஸுக்கும் கரிய ஆயுதத்தினால் காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம் சட்டத்தரணி ரி. லிங்கராஜா, சட்டத்தரணி ரி. தனராஜசிங்கம், சட்டத்தரணி திருமதி. கு. றட்ணபாலா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஐ. ஞானதாசன் ஆஜரானார். விசாரணை இன்றுவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. [மா-க]

## அரியாலை சுதேசியதிருநாட்கொண்டாட்ட விழாவும் போட்டிகளும்

[அரியாலை]

அரியாலை 64-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா வெகுசிறப்பாக நடைபெறவிருக்கிறது.

சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட கலைப் போட்டிகள் டாக்டர் அருளம்பலம் ஞாபகார்த்த மண்டபத்திலும் நாடகப் போட்டிகள் அரியாலை சரஸ்வதி மத்திய நூல் நிலைய மண்டபத்திலும் விளையாட்டுப் போட்டிகள் அரியாலை விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவிருக்கின்றன.

விளையாட்டுப் போட்டிகளில் வடமாகாணரீதியிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டி 20 ஓவர் கொண்ட எறிபந்தாட்டப் போட்டி 6 பேர் கொண்டகரபந்தாட்ட ஓவர் கேம் போட்டி பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி, 5 மைல் மரதன் ஓட்டப்போட்டி உள்ளூர் கழகங்கள் கலந்து கொள்ளும் தாச்சிப் போட்டி பெண்களுக்கான 5 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி 55 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கான 3 மைல் ஓட்டப்போட்டி என்பன நடைபெறவிருக்கின்றன. [அ]

## இன்றைய பலன்

மாசி மாதம் 30-ம் திகதி திங்கட்கிழமை (14—3—83)

மேடம்: ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவீர்கள், உடலில் நலிவு தோன்றும், பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள், பணம் தேடும் படலத்தில் வெற்றி உண்டு.

இடபம்: கற்றதால் பயன் இன்று கைமேல் கிடைக்கும், காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் செய்தியொன்று கிடைக்கும், வாகன விருத்தியும் வரவில் திருப்தியுமுண்டு.

மிதுனம்: கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் குவியும், பொதுமென்ற மனதுடன் செயலாற்றுவீர்கள், அன்புக் கரங்கள் அதிர்ஷ்ட தேவதையை அணைக்கும்.

கடகம்: சொற்சிலம்பம் ஆடுவதன்மூலம் எதிரிகளை வசீகரிப்பீர்கள், இதயத்தில் எரிமலை குமுறும், பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும், கவனம் வேண்டும்.

சிங்கம்: பொய்க் கோபம் காட்டிய ஒருவர் இன்று உம்முடன் இணைய முன்வருவார். காதல்ஜோடிகளுக்கு ஆதரவு கொடுப்பார்கள், மனம்போல் வாழ்வு மலரும்.

கன்னி! பூமிப்பிணக்குகளுக்கு இடமுண்டு, முயற்சியில் முட்டுக்கட்டை தோன்றும், சிலருக்கு உடல்நலம் பாதிக்கப்படலாம், நண்பர்கள் பக்கத்தில் நின்று படுகுழி தோண்டுவர்.

துலாம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும், யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம், நீண்டநாள் கனவு இன்று நனவாகும், மனப்பான்மையில் நற்பெயர் கிடைக்கும்.

விருச்சிகம்: வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவீர்கள், ஆராய்ச்சியாளருக்கு பொன்னான தினம், திரவிய லாபத்திற்கு இடமுண்டு, உத்தியோக உயர்வும் உரிமையும் கிடைக்கும்.

தனுசு: இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர், புத்திரர் கல்வியில் முன்னேற்ற முண்டு, வணிகர்கள் அதிக ஆதாயம் பெறுவர்.

மகரம்: முன்னேற்றப்பாதையில் இருப்புத்திரை தொங்கவிடப்படும், பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும், முக்கியமான காரியங்களை இன்று பின்போடவும், உசாராக இருக்கவும்.

கும்பம்: மனதில் சோர்வு காணப்படும், சகோதரவழியில் சஞ்சலங்கள் தோன்றும். நடையில் தயக்கம் ஏற்படும், நெருக்கடியான நிலை உருவாகும், அகப்பட்டதைச் சுருட்ட சிலர் முனைவர்.

மீனம்: பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள், மேடைப் பேச்சாளர் பெரும் புகழ் அடைவர், பிரமச்சாரிகள் வாழ்வில் மகிழ்ச்சி உருவாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## பிரயாணிகள் பாதிப்பு

(மன்னார்)

தலைமன்னாரிலிருந்துராமேஸ்வரத்திற்குச் செல்லும் ராமானுஜம் கப்பலில் பொருட்களை அதிகமாக ஏற்றிச்செல்லப் படுவதால் கப்பலில் மேலதிக பிரயாணிகளை ஏற்றமுடியவில்லை என்று ராமானுஜம் சப்பல் கப்டன் லோறன்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையிலுள்ள தீர்வையற்ற கடையில் வெளிநாட்டுப் பொருட்களை வாங்குவதற்காகவே பெருந்தொகையான இந்திய உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகின்றனர் என்றார். (க)

## நெடுந்தீவில் பொதுநூலகம் நிறுவப்படும்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பொது நூலகத்திற்கான புதிய கட்டிடம் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் என நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் திரு. சிவ. சங்கரப்பிள்ளை தெரிவித்தார். புதிய கட்டிடத்திற்கென நெடுந்தீவு கிராமோதய சபைகள் கூட்டாகச் சுமார் ஒருலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. [அ]

## தபால் நிலைய குறைபாடுகள்


(மாவிட்டபுரம்)

வசாவிளான் தபால் நிலையத்தின் குறைபாடுகள் குறித்து வசாவிளான் சென். ஜேம்ஸ் சனசமூக நிலையம் தபால் அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

மேற்படி தபால் நிலையத்தின் அவசிய தேவைகள்பற்றியும், அவற்றை விரைவில்நிறைவேற்றித் தரும்படியும் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் எதிர்க்கட்சி முதல்வர் திரு.அ. அமிர்தலிங்கத்திற்கும், யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. வை. அருளானந்தம் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. [க]


# மீண்டும் கிடைக்கின்றது




## ஜப்பானிய பம்ப் தொழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

''டெர்க்காய்'' தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் ''பிறிக்ஸ் & ஸ்ரற்றன்'' என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

- நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
- மண்ணெண்ணெ கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
- மொத்த நிறை 28 கிலோ (61 றாத்தல்)
- ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு
ஹேலீஸ் லிமிட்டெட்
25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

Mel Ads

எமது யாழ். மாவட்ட ஏக விற்பனையாளர் :
கல்யாணி ஸ்ரோர்ஸ் 31, நியூ மார்க்கட், சுன்னாகம்.

## பரு. நீதிபதி முல்லைத்தீவிற்கு இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி. வி. பி. சுந்தரலிங்கம் முல்லைத்தீவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு கல்முனை மாவட்ட நீதிபதி. திரு. ரி. யோகநாதன் இடமாற்றம் பெற்றுள்ளார்.


**மனோகரா** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ராஜஸ்ரீ
சுந்தரராஜன் - நிர்மலா
**நீதிதேவன்**
(புதிய பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
**ராஜா வீட்டுப் பிள்ளை**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி- 4-15, 7-00
சனி. ஞாயிறு 1-30
சிவாஜி - உஷாநந்தினி
**என்னைப்போல் ஒருவன்**

**றீகல்** (யாழ். நகர்)
Daily 5 Shows Only
10-30, 2-15, 4-45, 7-00
Burt Lancaster in
TWILIGHTS LAST GLEAMING—Color

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**என் அண்ணன்**

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் — சௌகார்ஜானகி
**துணைவன்**

**சாந்தி** 10-30, 2-15, 4-45, 7-00, 9-45.
(யாழ். நகர்)
Charlton Heston—George Kennedy in AN EVENT...
**EARTH QUAKE** Action—Suspense Scope—Color
பூமி அதிர்ச்சி-மிகுந்த பரபரப்பூட்டி மெய்சிலிர்க்க வைக்கும் பிரமாண்ட படைப்பு.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
**கீழ்வானம் சிவக்கும்**
(கலர்)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
**ராஜா** (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
**கர்ணன்** இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி(சினிமாஸ்கோப்)
எமது அடுத்த வெளியீடு
**துணிவே துணை**

**ராணி** தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
**தேடிவந்த மாப்பிள்ளை**
(புதிய பிரதி)

**வின்ஸர்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார் - சுஜாதா - தேங்காய் சீனிவாசன் நடித்த
**அன்னக்கிளி**
16-3-83 புதன் முதல்
சிவகுமார், சரிதா, சில்க் சுமிதா
**வண்டிச்சக்கரம்**
(கலர்)


## பொலிஸார் உஷார்: லைசென்ஸ் இல்லாத வாகனங்கள் ஜாக்கிரதை!

[அரியாலை]

1983ம் ஆண்டுக்கும், அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் வாகனவரி கட்டாதவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்ய யாழ்ப்பாணம் கச்சேரி இறைவரிக்கிளை துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்விஷயம் சம்பந்தமாக யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா இதுவரை வாகன அனுமதிப் பத்திரம் பெறாதவர்கள் மீது வழக்குத்தாக்கல்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண பொலிஸ் அத்தியட்சகரைக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்டப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் அனுமதிப்பத்திரமில்லாமல் வீதிகளில் ஓடும்வாகனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளனர்.

யாழ். நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் தொடர்ந்து நீதிமன்றக் கட்டணத்தைப் பெறாது உதாசீனம் செய்துவரும் வாகன உரிமையாளர்கள் மீது பிடிவிறாந்து அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வாகன அனுமதிப் பத்திரம் பெறுபவர்கள் மீதும், வாகன வரி நிலுவை செலுத்தாதவர்கள் மீதும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களில் உடனடியாக வழக்குகள் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

மோட்டார் வாகனம் உபயோகிக்காமை பற்றி அறிவித்தல் கொடுத்தும் அவ்வறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாதவிடத்து எதுவித முன்அறிவித்தலுமின்றி வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதும் எக்காரணம் கொண்டும் வாகன வரியை யாழ் கச்சேரி இறைவரிக்கிளையில் செலுத்த முடியாது. நீதிமன்றங்களில் வழக்கை ஏற்றுக்கொண்டதும், நிலுவைப்பணமும் குற்றப்பணமும் நீதிமன்றங்களிலே கட்டப்படவேண்டும்.

இவ்வாறு யாழ். கச்சேரி இறைவரிக்கிளை பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ)

## "சிறந்த பிரஜையாவதற்கு மாணவர் கல்வி, விளையாட்டு துறையில், திறமை பெறவேண்டும்"

[அரியாலை]

கல்லூரிகளின் வளர்ச்சிக்கு அபிவிருத்திச்சங்க அங்கத்தவர்களும் பழைய மாணவ மாணவிகளும் போதிய ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாணவர் சிறந்த பிரஜைகளாக வரவேண்டுமானால் அவர்கள் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் போதிய திறமை காட்ட வேண்டும்.

இவ்வாறு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு தலைமை வகித்த கல்லூரி அதிபர் திரு. இ. சச்சிதானந்தம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமதி புஷ்பா மோகனதாஸ் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார்கள் கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் திரு.க.வை. தனேஸ்வரன் நன்றி கூறினார்.

பிரதம அதிதி கலாநிதி சு. மோகனதாஸ், வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருமதி புஷ்பா மோகனதாஸ் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கினார். கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் திரு. க. வை தனேஸ்வரன் நன்றி கூறினார். (க)

## "அடிகளார் மறைந்தாலும் அவர் தொண்டு நிலைக்கும்"

[அரியாலை]

கடவுளின் ஊழியத்திற்கென தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் மிக முதன்மை வாய்ந்தவராக அமரர் அருட்திரு ஏ. சி, தம்பிரராசா அடிகளார் விளங்கினார். அவரால் அமைக்கப்பட்டு நடாத்தப்பட்டுவரும் நவஜீவனம் ஆதரவற்றவர்களுக்கும், அநாதைகளுக்கும் ஆதரவளிக்குமிடமாகவும் அன்பு கொடுக்கும் இடமாகவும் இருக்கிறது. அவர் மறைந்தாலும் அவர் மக்களுக்காற்றிய சேவையும் தொண்டும் என்று மறக்கமுடியாததாகும்."

இவ்வாறு நல்லூர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முன்னாள் அதிபர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம், யாழ்ப்பாணம் பரிசுத்த பேதுருவானவர் ஆலயத்தில் நடைபெற்ற காலஞ்சென்ற அருட்திரு ஏ.சி தம்பிராசா அடிகளாரின் ஜீவியத்திற்கும் சேவைக்கும் நன்றி தெரிவிக்கும் ஆராதனையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நன்றி தெரிவிக்கும் ஆராதனையை அருட்திரு எச். ஆர். எஸ். ஜெயச்சந்திரன் அடிகளாரும், அருட்திரு எஸ். என். சுகுணனந்தன் அடிகளாரும் ஒப்புக்கொடுத்தனர்.

ஏராளமானோர் கலந்து கொண்ட இவ்வாராதனையில் யாழ்ப்பாண ஆர்ச் டீக்கன் அருட்திரு சாம்.டி.ஹோசிங்டன் அடிகளார் அருளுரை நிகழ்த்தினார். (அ)

## இடமாற்றம்

(அரியாலை)

யாழ். இந்துக்கல்லூரியில் விஞ்ஞானபட்டதாரிஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி பி. சிவானந்த நாயகம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (க)

## யாருடையது?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் ஞானசுந்தரத்தினால் யாழ். சத்திரச் சந்தியில் வைத்தியப் புத்தகக்கட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (க)

## கோப்பாய் வட்டார உடற்பயிற்சிப் போட்டி

[அரியாலை]

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக் கிடையிலான உடற்பயிற்சி போட்டி இம்மாதம் 17-ந் திகதி வியாழக்கிழமை காலை கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி மைதானத்தில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

## சேமக்காலையில் சிரமதானம்

[யாழ்ப்பாண ]

யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்கள் பண்ணை சேமக்காலையில் சிரமதானம் செய்தனர். இச்சிரமதானத்தின் போது ஆசிரியர் ஸ்ரீகரனின் மேற்பார்வையில் மாணவர் தலைவர்களான சந்திரகுமார், அஜித்குமார் ரேய்ஸ் ருஜேந்திரா ஆகியோரும் சாரண சிறுவர்களின் ஒத்துழைப்புடன் இச்சிரமதானத்தை மேற்கொண்டனர்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சங்கானை கிழக்கு சூசைப்பிள்ளை யோன்ராசா பயஸ் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

–மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 138/T

சூசைப்பிள்ளை யோன் ராசா பயஸ் மைம்பெண் ஸ்ரெலா ஜெயராணி பயஸ், தேவாலய வீதி, சங்கானை.

–மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு பங்குனி 16ந் நாளன்று முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

பதிவாளர்.

1983ம் ஆண்டு மாசி மாதம் 14ந் திகதியாகிய இன்று தேதியிடப்பட்டது.

M. K. சுப்பிரமணியம்,
மனுதாரின் சட்டத்தரணி.
6488


## விற்பனைக்கு

யாழ்ப்பாணம்:
வீடு – மணத்தறைலேன் – 2 பரப்புக் காணியுடன்
வீடு – சிவன்பண்ணைவீதி – 2 பரப்புக் காணியுடன்
வீடு – செட்டித் தெரு – 4½ பரப்புக்காணியுடன்
4 பரப்புக் காணி – முத்தமிழ் வீதி

திருநெல்வேலி:
வீடு – பல்கலைக்கழகவீதி, – 2 பரப்புக் காணியுடன்
வீடு – செங்குந்தா வீதி – 2¾ பரப்புக்காணியுடன்

கோண்டாவில்:
2 பரப்புக் காணி – பொற்பதி வீதி
2 பரப்புக் காணி – நவரத்தினராஜா வீதி

மானிப்பாய்:
4 பரப்புக் காணி – சங்கரப்பிள்ளை வீதி

தெல்லிப்பழை:
8 பரப்புக்காணி – அன்னம்மா கோவில் வீதி.

வல்வெட்டிதுத்துறை:
வீடு – பாரதிவீதி கம்பர் மலை.

சிறுப்பிட்டி
3 பரப்பு காணி – பருத்தித்துறை வீதி.

கைதடி:
3 பரப்பு காணி – மானிப்பாய் வீதி.
8 வீடு கட்டக்கூடிய காணிகள் 8 கண்டி வீதி.

விபரங்களுக்கு:-
த பினான்ஸ் கம்பனி லிமிற்றட்,
(Real Estate Division)
249, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

### கார் விபத்தில் பலியான

# மூதாட்டி, கைக்குழந்தையின் சடலங்கள் ஆஸ்பத்திரியில்!

(வேலணை)

வேலணையில் கார் விபத்துக்கு பலியான வயோதிபபெண்ணினதும், கைக் குழந்தையினதும் சடலங்கள், யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

வேலணை மேற்கில் நடந்த இச்சம்பவத்தில் இளையபிள்ளை (வயது 70) ஜி. விஜேந்திரன் (ஒருவயது) ஆகியோர் பலியானார்கள்.

இவர்களிருவரும் பாதையோரமாகச் சென்று கொண்டிருந்தபோது, கார் ஒன்றினால் மோதுண்டனராம்.

இருவரையும் மோதியகார் கடைஒன்றின் முன்பக்கத்துடன் மோதியதால், கடையும் பலத்த சேதமடைந்ததாம்.

சம்பந்தப்பட்ட கார் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதியும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (மா)

# 'பட்ஜட்' வருவதற்கு முன் விலைகள் அதிகரித்துவிட்டது"

(யாழ்ப்பாணம்)

"வரவு செலவுத் திட்டத்தினால் வாழ்க்கைச் செலவுச் சுமை, விலைவாசி உயர்வு, பணவீக்கம் ஆகியவற்றால் பெருமளவு பாதிக்கப்பட்டு இருக்கும் ஏழைப்பாட்டாளி மக்களுக்கு எதுவித நிவாரணமும் இல்லை"

தமிழ் மாணவர் பேரவைத் தலைவர் வேங்கை ஆனந்தன், வரவுசெலவு திட்டம்தொடர்பாகவெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"விலைவாசி மேலும் விஷம் போல் ஏறுகிறது. ஏழைப் பாட்டாளி வர்க்கம் எரிமலை போல் குமுறுகிறது.

"விலைவாசி உயர்வதற்கு வழிவகுக்கப் பட்டிருக்கிறதே தவிர, எந்த ஒரு அத்தியாவசியப் பொருட்களுக்கும் விலை குறைக்கப்படவில்லை பட்ஜட் முழு ஏமாற்றத்தையே மக்களுக்கு கொடுத்துள்ளது. ஏற்கனவேமலைபோன்றவிலைவாசி உயர்வால் வாழமுடியாது தவித்த மக்களுக்கு மேலும் சுமையை அதிகரித்துள்ளது. வரவுசெலவுத்திட்டம் வருவதற்குமுன்னரேபொருட்களின் விலைகள் அதிகரித்துவிட்டது. (அ)

### உண்மைகள்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சிக்க உரிமையுண்டு. ஆனாலும், நீலனும் வில்சனும் சட்டத்துறை நிபுணர்கள். அரசுக்கும் கூட்டணிக்குமிடையே பேரம்பேசும் தூதுவர்கள். அப்படிப்பட்ட நிபுணராக இருந்தாலென்ன மக்களின் அங்கீகாரம் பெறவேண்டும் என்பதே ஆசிரியரின் கருத்து எமக்கு நீலனென்றாலென்ன, வில்சனென்றாலென்ன எல்லோரும் ஒன்றுதான். எமக்குத் தேவை மக்களின் அங்கீகாரம்தான். எத்தகைய நிபுணராக இருந்தாலும் தம் நிபுணத்துவப் பட்டத்தின் பதவியில் இருந்துவிடமுடியாது. அதற்கு மக்களின் அபிப்பிராயம்பெற்றே ஆகவேண்டும் என்பதே ஆசிரியரின் உட்கருத்து. அதை விட்டு யாரும் விமர்சனை கின்டல்செய்யவில்லை. உதாரணத்துக்காக விமர்சனை எடுத்துரைத்தார்.

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை. அவை சிலவேளைகளில் ஊமையாகிவிடுகின்றன எனவே வட்டுக்கோட்டை நேயர் ஆசிரியரின் கருத்துக்களின் உண்மையை உணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை எனக் கூறி விடைபெறுகின்றேன்.

தர்ம ஞானலிங்கம்
நல்லூர்.

### வண், வைத்தீஸ்வர

# மாணவர் மன்ற இராப்போசனம்

[யாழ்ப்பாணம்]

வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற இராப்போசன விருந்து நாளைசெவ்வாய்க்கிழமைமாலை நடைபெறவுள்ளது. யாழ். பிரதம கல்விபதிகாரி ஜனாப் எம். எம். மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார். [மா]


# ஹோம் பிறின்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறின்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறின்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

## ஹோம் பிறின்ஸ் லிமிட்

82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

## ஹோம் பிறின்ஸ் லிமிட்

463, காலி வீதி, கொழும்பு-3


# பரு. கொட்டடி சித்திவிநாயகர் இன்று தீர்த்தம்

பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு அருகாமையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளுடன் கோயில் கொண்டெழுந்தருளியிருந்து அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கொட்டடி சித்திவிநாயகப் பெருமான் இன்று தீர்த்தமாடுகின்றார். இத்தீர்த்த விழாவிலே கலந்து கொண்டு பக்த கோடிகள் பெறுதற்கரிய பேற்றினைப் பெறப்போகின்றார்கள். நேற்று விநாயகப் பெருமான் தேரேறி வீதிவலம் வந்து அருள்பாலித்தார்.

### 350 வருடப் பழைமை வாய்ந்தது

பருத்தித்துறையிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானின் ஆலயம் 350 வருடங்களுக்கு மேற்பட்ட சரித்திரப் பழமை பெற்றது. இப்பகுதியிலே முதன்முதலிலே தோன்றிய ஆலயமும், பெரிய விசாலமான வீதிகளையுடைய ஆலயமுமானபடியினாலேயே இவ் ஆலயத்திற்குப் பெரிய பிள்ளையார் கோவில் என்ற பெயரும் ஏற்பட்டது.

இலங்கைக்கு ஒல்லாந்தர் வந்து ஆட்சி செய்த போது அவர்கள் தமது சமயத்தைப் பரப்புமுகமாகச் சைவசமய வழிபாட்டிற்கு இடமளிக்கவில்லை. சைவக் கோவில்களை அழித்தார்கள், அதுபோலவே பருத்தித்துறையில் உள்ள இவ் விநாயகராலயத்தையும் அழித்தார்கள். இதனால் இங்குவாழ்ந்த சைவமக்கள் துயரடைந்தார்கள், இன்னல் பட்டார்கள். இத்துயரைப் பொறுக்க முடியாமல் இம்மக்கள் இந்தியாவிலிருந்து பருத்தித்துறைத் துறைமுகத்தினூடு இறக்குமதி செய்த சொரிநெல்லினுள் விநாயக விக்கிரகமொன்றை மறைத்து களவாகக் கொண்டு வந்தனர்.

இங்கு கொண்டுவரப்பட்ட விநாயக விக்கிரகத்தை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் பனங்கட்டிக் கொட்டுக்குள் வைத்துப் பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தார்கள். இவ்வாறு கொட்டுக்குள் வைத்து வணங்கப்பட்டு வந்தமையினாலேயே 'கொட்டடிப்பிள்ளையார்' என்றும் பெயர் வழங்கப்பட்டது.

இலங்கையில் வேறெந்த ஆலயத்திலும் காணமுடியாத அமைப்போடு ஆலயத்தெப்பக் குளம் அமைந்திருப்பது இவ் ஆலயத்தின் தனிப்பெருஞ் சிறப்பாகும். இத்தெப்பக்குளத்திலே தெப்பத் திருவிழா அதிசிறப்பாக நடைபெற்று வருகின்றது.

கடந்த மாதம் 28-ம் திகதி சித்தி விநாயகரின் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்றுத் தேர்திருவிழா நடைபெற்றது. இன்று தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. வியாழக்கிழமை தெப்போற்சவம் நடைபெறவுள்ளது.

இம்மகோற்சவ காலங்களிலும் ஏனைய விசேஷ காலங்களிலும் எம்பெருமானின் சந்நிதானம் சென்று அவர் அள்ளி, அள்ளி வழங்குகின்ற அருளைப் பெற்று உய்வோமாக.

— ஏ. என். எஸ்.
திருச்செல்வம்.

### வாரியாருக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய தேவஸ்தான தர்மகர்த்தா திரு. வி. டி. வி. தெய்வநாயகம்பிள்ளை பெற்றுக்கொள்வார். இதைத் தொடர்ந்து 'மேன்மைகொள் சைவ நீதி' என்னும் பொருளில் வாரியார் சுவாமிகளின் கதாப்பிரசங்கம் நடைபெறும்.

# இப்படியும் நடக்கிறது

தென்னாபிரிக்காவில் நிலவும் இன ஒதுக்கல் கொள்கை, நமது நாட்டிலுள்ள சில ஹோட்டல்களிலும் அமுலில் இருக்கிறதா?

ஹிக்கடுவ கடலில் நீராடிக்கொண்டிருந்த இரு குடும்பத்தினர், தங்களது நண்பகல் உணவை, அருகிலுள்ள ஹோட்டலில் சுவைக்க விரும்பி, ஹோட்டல் பணியாளரிடம் தெரிவிக்கவே "சாப்பாடு தரலாம்" என்று பதிலளிக்கப்பட்டது.

கடலில் நீராடிய அவர்கள், ஹோட்டலில் சாப்பிடமுன்னர், அங்கு குளிக்க விரும்பினர். ஆனாலும் குளித்துக்கொண்டிருந்தபோதே திடீரென, உடைமைகளுடன் வெளியேறுமாறு அவர்களுக்கு உத்தரவு பிறந்தது!

"நாம் ஒரு குற்றமும் செய்யவில்லையே. நீங்களும் அனுமதி வழங்கித்தானே நாம் இங்கு வந்தோம்..." என்று அவர்கள் நியாயம் கூறவே, மனேஜர் வசைமாரி பொழிந்தார்!

"ஏன் இப்படி தூஷண வார்த்தைகளால் ஏசுகின்றீர்கள். உங்களைப்பற்றி புகார் செய்யப்போகின்றோம்..." என்று அவர்கள் கூறியதுதான் தாமதம் ... ஹோட்டல் பணியாளர்கள், வெளியார் சிலர் சகிதம் மனேஜரிடமிருந்து 'நல்ல சாப்பாடு' கிடைத்தது!

மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்ட இரண்டு இந்தியர்களும், தங்களது குடும்ப சகிதம் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்து நீதியை இப்பொழுது எதிர்பார்த்திருக்கின்றனர்!

— 'ஊடுருவி'

# பனஞ்சாராய வடிசாலை அடுத்தமாதம் திறக்கப்படும்

[புலோலி]

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள திக்கத்தில் இருபது லட்சம் ரூபா செலவில் உருவாகி வரும் பனஞ்சாராய வடிசாலை ஏப்ரல் மாதம் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் திக்கம் பனம் பொருள் பல் தொழில் தொகுப்பில் இப்பனஞ்சாராய வடிசாலை முதற்கட்ட வேலைகளுக்கென யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை பத்து லட்சம் ரூபாவை ஒதுக்கி இருந்தது.

யாழ். மாவட்டத்தில் தேவைக்கு அதிகமாக மிஞ்சி வீணாக வெளியில் ஊற்றப்பட்டு வரும் பனம் கள்ளை இவ் வடிசாலை மூலம் பனஞ்சாராயமாக மாற்றிப் பெரும் அளவில் வருமானத்தை ஈட்ட முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சென். மேரிஸ், 'வைக்கிங்ஸ்' சாம்பியன்கள்

(யாழ்ப்பாணம்)

7-பேர் கொண்ட உதைபந்தாட்ட 'நொக்அவுட்' போட்டியில் 'ஏ' பிரிவில் நாவந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும், 'பி' பிரிவில் 'வைக்கிங்ஸ்' விளையாட்டுக் கழகமும் சாம்பியன் கிண்ணங்களைத் தட்டிக் கொண்டன.

'பி' பிரிவில் வைக்கிங்ஸ் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 4-1 கோல்களால் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. எம். தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

'ஏ' பிரிவில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகம், பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்தை 3-1 கோல்களால் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. ஏ. தேவராசா மத்தியஸ்தம் வகித்தார்!

போட்டியின் ஆரம்பத்தில் இறுதியாட்டங்களில் கலந்து கொண்ட விளையாட்டுக் கழக வீரர்களை, யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பீலிப், பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட, குருநகர் கிராமோதயசபைத்தலைவரும், தலைமை ஆசிரியருமான திரு. எஸ். அல்சீசியஸ்க்கு அறிமுகம் செய்து வைத்தார். (வி)

# 'காந்தி' இலங்கையில் திரையிடக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் வாழ்க்கைச் சித்தரிக்கும் ஆங்கிலத் திரைப்படமான 'காந்தி'யை விரைவில் இறக்குமதி செய்து இலங்கை மக்களுக்கு உதவும்படி அறவழிப் போராட்டக் குழுவினர் இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தினை வேண்டியுள்ளது

இப்படம் வெளிநாடுகளில் மிகவும் பிரபல்யம்மிக்கதாக விளங்கி வருவதாகவும் இலங்கை மக்களும் இதனை அவசியம் பார்க்க வேண்டும் எனவும் அறவழிப்போராட்டக் குழுவினர் தெரிவித்தனர். (மா)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா இலட்சுமி (அம்மாச்சி)

ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா இலட்சுமி காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், திருமதி இராசரத்தினம் பரமலிங்கம் [பிரதம தாதி, அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்], திருமதி ப. புஸ்பவதி [அரசினர் வைத்தியசாலை, சாவகச்சேரி], புஸ்பராசா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமலிங்கம் [முன்னாள் கொக்குவில் கிராமசபை உபதலைவர்], நாகேஸ்வரி [பிரான்ஸ்] ஆகியோரின் மாமியாரும், திருமதி செல்லையா நல்லம்மாவின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று 14-3-83 திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில நடைபெறும். [6535]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.